1 டிசம்பர் 2023

அன்பார்ந்த புக்கிட் தீமா குடியிருப்பாளர்களே,

**<u>புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு மற்றும் இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை</u>**

புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு, புக்கிட் தீமா இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து உங்களிடம் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

2 புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு, இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை ஆகியன பற்றி அண்மையில் வெளிவந்த செய்திகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். “GeBIZ” எனும் அரசாங்கக் கொள்முதல் இணையத்தளத்தில் 2023 அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட ஏலக்குத்தகையின் அடிப்படையில் அச்செய்திகள் வெளிவந்தன. புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் கட்டட அமைப்புமுறை பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காகச் சான்றுபெற்ற சோதனையாளர்களை நியமிக்க, மக்கள் கழகம் அந்த ஏலக்குத்தகையை அறிவித்தது.

**புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் காலத்திட்டம்**

3 புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டைத் திட்டமிட்டு வடிவமைக்கப் பல்வேறு அமைப்புகள் கூட்டாக மேற்கொண்டிருக்கும் முயற்சியை மக்கள் கழகம் வழிநடத்துகிறது. இந்த மேம்பாட்டில், விரிவாக்கப்பட்ட புக்கிட் தீமா சமூக மன்றம், மேம்படுத்தப்பட்ட புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையம், பெய் ஹுவா பிரஸ்பெட்டெரியன் தொடக்கப் பள்ளியின் புதிய உள்ளரங்கு ஆகியவற்றுடன், பியூட்டி வோர்ல்ட் பெருவிரைவு இரயில் நிலையத்தருகில் மற்ற பல சமூக வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4 மேம்பாட்டுப் பணிக்குழுவினர், புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் திட்டமிடல், வடிவமைப்பு குறித்து 2019-ல் குடியிருப்பாளர்கள், உணவங்காடிக் கடைக்காரர்கள், சம்பந்தப்பட்ட மற்ற தரப்பினர் ஆகியோரைக் கலந்தாலோசிக்கத் தொடங்கியது. அதன்பின், கொவிட்-19 கிருமிப்பரவலால் வடிவமைப்பு சற்று தாமதமடைந்தது. இட அமைப்புமுறை போன்றவை மறுஆய்வு செய்யப்பட வேண்டியிருந்தது இதற்குக் காரணம். இந்நிலையில், நிலப்பகுதியின் நிலைமை, தொழில்நுட்பச் சிக்கல்கள் ஆகியவற்றால், புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் இறுதி வடிவமைப்பைத் தயார்ப்படுத்த கூடுதல் காலம் தேவைப்படும் என்று இந்த ஆண்டு எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட

மேம்பாடு 2029 இரண்டாம் பாதியில் (மாற்றத்திற்கு உட்பட்டது) நிறைவடையும் என இப்போது கணிக்கப்படுகிறது.

5 தற்போதைய புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையம், அதற்குப் பக்கத்திலுள்ள திறந்தவெளி வாகன நிறுத்துமிடம், உணவு நிலையத்திற்கும் Esso பெட்ரோல் நிலையத்திற்கும் இடையிலுள்ள காலி நிலப்பகுதி ஆகிய மூன்றும் உள்ளடங்கிய நிலப்பகுதியில் புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அனுமதிகள் அனைத்தும் கிடைத்த பிறகு மட்டுமே, மேம்பாட்டின் வடிவமைப்பு, வசதிகள், அமைப்புமுறை போன்றவை பற்றிய மேல்விவரங்களை எங்களால் பகிர்ந்துகொள்ள இயலும்.

6 தோ யீ குடியிருப்புப் பேட்டையின் புளோக் 1, 2 ஆகியவற்றில் வசிக்கும் குடியிருப்பாளர்கள், 2023 மார்ச் மாதம் நடத்தப்பட்ட கலந்தாலோசனை அங்கத்தில் தெரிவித்த கருத்துகளையும் நாங்கள் கவனத்தில் கொள்வோம்.

**புக்கிட் தீமா இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை**

7 தற்போதைய புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையத்தை இடிக்கும் பணி 2024 இரண்டாம் பாதியில் (மாற்றத்திற்கு உட்பட்டது) தொடங்கும். அதனைத் தொடர்ந்து, புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் கட்டுமானப் பணி தொடங்கும்.

8 இடிக்கும் பணி தொடங்கும் வரை, புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையம் தற்போதைய இடத்திலேயே தொடர்ந்து செயல்படும். தற்போதைய இடத்திற்கு அருகே, ஜாலான் சே சுவானில் அமைக்கப்படும் இடைக்கால உணவங்காடி நிலையத்திற்கு/சந்தைக்கு 92 கடைக்காரர்கள் இடம் மாறிச் செல்வார்கள். புக்கிட் தீமா சந்தை சங்கம் தற்காலிக நிலையத்தை/சந்தையை வழிநடத்தும். இடம் மாறிச் செல்லும் கடைகளின் பட்டியலை [https://www.btcares.sg/ihc] இணையத்தளத்தில் காணலாம்.

9 இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை, "குத்தகைக்கு விடுவதற்காகக் கட்டும்" ஏற்பாட்டின்மூலம் 92 கடைக்காரர்கள் வழங்கும் நிதியுடன் கட்டப்படும். கடைக்காரர்கள் அங்கு இடம் மாறிச் சென்ற பிறகு, இடத்தை நிர்வகிப்பவருக்குச் செலுத்தும் வாடகையுடன், கட்டுமானச் செலவு ஈடு செய்யப்படும். இடைக்கால உணவங்காடி நிலைய/சந்தை குழு, தற்காலிக இடத்தைக் கட்டுவதற்கும் நிர்வகிப்பதற்கும் தனியார் நிறுவனம் ஒன்றை நியமித்துள்ளது.

10 இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை சாத்தியமாவதை உறுதி செய்யவும், காலத்திட்ட மாற்றங்களால் அதிகரிக்கும் செலவைக் குறைக்கவும் புக்கிட் தீமா சந்தை சங்கத்திற்கு உதவி புரிய, புக்கிட் தீமா

அடித்தள அமைப்புகள், மக்கள் கழகம், மற்றும் பல்வேறு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. கட்டடத்தின் இரண்டாவது, மூன்றாவது மாடிகள், பொதுத் துறையில் பணிபுரியும் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கான தற்காலிகத் தங்குமிடமாகப் பயன்படுத்தப்படும். உணவங்காடிக் கடைக்காரர்கள் வருங்காலத்தில் முதல் மாடியில் செயல்படுவதற்கு இது எந்த வகையிலும் இடையூறாக இருக்காது.

11 இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பின்னிணைப்பில் காணலாம்.

## அடுத்த கட்ட நடவடிக்கைகள்

12 புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டின் கட்டுமானப் பணிக்குத் தயார்ப்படுத்துவதற்காக, மேம்பாடு கட்டப்படவிருக்கும் இடத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள மின்சார, எரிவாயு, தொலைத்தொடர்புச் சேவை இணைப்புகளை மாற்றியமைக்கும் பணி **2023 டிசம்பர் மத்தியில்** தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சேவைகளின் விநியோகத்தில் தடங்கல் எதுவும் ஏற்படாது. ஆனால், தற்காலிகப் போக்குவரத்து திசைமாற்றம் போன்ற சில சிரமங்கள் ஏற்படலாம். குடியிருப்பாளர்களுக்கும் வாகன ஓட்டுநர்களுக்கும் ஏற்படக்கூடிய சிரமத்தைக் குறைக்க முழுமுயற்சி எடுக்கப்படும்.

13 குடியிருப்பாளர்களின் ஆதரவுக்கும், பொறுமைக்கும், புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு குறித்து கருத்து சேகரிப்பதற்காக நடத்தப்பட்ட அங்கங்களில் பங்கெடுத்ததற்கும் எங்களின் நன்றி. உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து PA_BukitTimahCC@pa.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

அன்புடன்,

**டாக்டர் கென்னி சிம்**, BBM (**கொவிட்**-19), PMB
தலைவர்
புக்கிட் தீமா குடிமக்கள் ஆலோசனைக் குழு

**திரு லோ சாவ் கியட்**
தலைவர்
புக்கிட் தீமா இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை திட்டக் குழு

**திரு லிம் ஜிட் காய்**
இயக்குநர்
வட மேற்கு சமூக மேம்பாட்டுப் பிரிவு
மக்கள் கழகம்

**பின்னிணைப்பு**

***கேள்வி 1: இடைக்கால உணவங்காடி நிலையத்தின்/சந்தையின் கட்டுமானத்திற்கு புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையக் கடைக்காரர்கள் பொறுப்பேற்றிருக்கையில், அவர்கள் ஏன் வாடகை செலுத்தவேண்டும்?***

**பதில் 1:** கடைக்காரர்கள் வேறு உணவங்காடி நிலையங்களில்/சந்தைகளில் தற்காலிகமாகச் செயல்பட விரும்பாவிட்டால், சந்தை/உணவங்காடி சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து நிதி திரட்டி, இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை கட்டுவதற்குக் குத்தகையாளரை நியமிப்பது வழக்கம். கடைக்காரர்கள் கட்டுமானச் செலவில் தங்கள் பங்கை முன்பணமாகக் கொடுத்திருப்பார்கள் என்பதால், இடைக்கால உணவங்காடி நிலையத்தில்/சந்தையில் வாடகை செலுத்த வேண்டியிருக்காது.

புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையத்தைப் பொறுத்தவரை, கடைக்காரர்கள் பலரும் இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை அமைப்பதில் ஆர்வம் காட்டினர். ஆனால், அவர்கள் கட்டுமானச் செலவை ஏற்றுக்கொள்ள ஒரு நிர்வகிப்பாளரை நியமித்து, நிர்வகிப்பாளரிடமிருந்து கடைகளைக் குத்தகைக்கு எடுக்க விரும்பினர். அதனால், புக்கிட் தீமா சந்தை உணவங்காடிக் கடைக்காரர்கள் சங்கம், இடைக்கால உணவங்காடி நிலையத்தின்/சந்தையின் நிர்வகிப்பாளருடன் “குத்தகைக்கு விடுவதற்காகக் கட்டும்” ஏற்பாட்டைச் செய்தது. இந்த ஏற்பாட்டின்கீழ், நிர்வகிப்பாளர் கட்டுமானச் செலவையும் செயல்பாட்டுச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டு, கடைக்காரர்களிடமிருந்து வாடகை முன்பணமும் மாத வாடகையும் சேகரிப்பார்.

***கேள்வி 2: இடைக்கால உணவங்காடி நிலையத்தில்/சந்தையில் செயல்பட வேண்டாமென முடிவெடுக்கும் புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையக் கடைக்காரர்கள் வேறு என்ன செய்யமுடியும்?***

**பதில் 2:** இடைக்கால உணவங்காடி நிலையத்தை/சந்தையைக் கட்டுவதற்குக் கடைக்காரர்கள் சொந்தமாக முன்பணம் திரட்டினாலும், அல்லது கட்டடத்தைக் கட்டி தங்களுக்குக் குத்தகைக்கு விட ஒரு நிறுவனத்தை நியமித்தாலும், குறிப்பிட்ட சில செலவுகளைத் தவிர்க்க முடியாது. மறுமேம்பாடு செய்யப்படவிருக்கும் உணவங்காடி நிலையங்கள்/சந்தைகள் மூடப்படுவதற்குமுன், தேசிய சுற்றுப்புற அமைப்பு கடைக்காரர்களுக்குத் தகவல் தெரிவிக்கும். இதன்வழி, கடைக்காரர்கள் இடைக்காலத் திட்டமிடப் போதிய கால அவகாசம் கிடைக்கும். அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம் அல்லது தற்காலிக நிலையத்திலோ/சந்தையிலோ அல்லது வேறு உணவங்காடி நிலையத்திலோ/சந்தையிலோ தற்காலிகமாகச் செயல்படலாம். வேறு நிலையங்களில் தற்காலிகமாகச் செயல்பட விரும்பும் கடைக்காரர்களுக்கு, அவர்கள் கோரும் நிலையத்தில் கடைகள் இருந்தால், தேசிய சுற்றுப்புற அமைப்பு ஏற்பாடுகள் செய்துதரும்.

***கேள்வி 3: இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை எவ்வளவு காலம் செயல்பாட்டில் இருக்கும்?***

**பதில் 3:** தற்போதைய கணிப்பின்படி, இடைக்கால உணவங்காடி நிலையம்/சந்தை 2024 இரண்டாம் பாதியில் செயல்படத் தொடங்கி, புதிய ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் 2029 இரண்டாம் பாதி வரை (மாற்றத்திற்கு உட்பட்டது) செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

***கேள்வி 4: இடைக்கால உணவங்காடி நிலையத்தில்/சந்தையில் செயல்பட வேண்டாமென முடிவெடுக்கும் புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையக் கடைக்காரர்களுக்கு, புக்கிட் தீமா ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாடு திறக்கப்படும்போது கடைகள் கிடைக்குமா?***

**பதில் 4:** புக்கிட் தீமா சந்தை, உணவு நிலையத்தின் தற்போதைய கடைக்காரர்கள், இடைக்கால உணவங்காடி நிலையத்திற்கு/சந்தைக்கு மாறிச் சென்றாலும் செல்லாவிட்டாலும், அவர்கள் அனைவருக்கும் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டில் கடை வழங்கப்படும்.